**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி**
**அசல் வழக்கு எண். 189/2012**

பெயர் : செல்வம் நாள் : 27.09.2022

வா.த.சா.3 – 4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.த.சா.3 – செல்வம் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

இந்த வழக்கை யார் யார்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், தெரியாது. எவ்வளவு விஸ்தீரணம் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. வழக்கை எத்தனை பங்கு கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. வாதி குடும்பத்தை சார்ந்த நபர்களையே பிரதிவாதிகளாகவும் சேர்த்துள்ளார்கள் என்றால், சரிதான். அவ்வாறு ஏன் சேர்த்துள்ளார்கள் என்ற விபரம் தெரிந்து கொண்டேனா என்றால், தெரியாது. குமரகவுண்டர் குடும்பத்தை சேர்ந்த யாரை பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால், தெரியாது. குமரகவுண்டரிடம் கிரையம் வாங்கிய அவரது குடும்ப உறுப்பினர்களை இந்த வழக்கில் வாதியாக சேர்த்தால், வாதிகளுக்கு எதிராக வழக்கு அமைந்துவிடும் என்ற காரணத்தினால், அவர்களை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. குமரகவுண்டருக்கு அழகப்பன் என்ற ஒரு மகன் உள்ளார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. அவரை இந்த வழக்கில் முதலாம் பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. குமரகவுண்டரின் மற்றொரு மகன் பெயர் பச்சமுத்து என்று சொன்னால், நான் கேள்விபட்டுள்ளேன். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. பச்சமுத்து மனைவி சின்னம்மாள் குமரகவுண்டரின் சொத்தை கிரையம் பெற்றுள்ளதால், அவரை பிரதிவாதியாக சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. குமரகவுண்டர் கடந்த 1991 ல் எவ்வளவு சொத்தை விற்பனை செய்து, எவ்வளவு சொத்தை கிரையம் பெற்றார் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. கிரையம் ஏற்பட்ட அன்று உடன் சென்றேனா என்றால், இல்லை. முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள விபரங்கள் சொல்லிதான் தெரியும் என்றால்,

சரியல்ல. எனது பாட்டி வீடு அங்குதான் உள்ளது. நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் 4 முதல் 6 வாதிகள் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார்கள் என்பது பொய் என்று சொன்னால், சரியல்ல. வாதிகள் நான் சாட்சியத்தில் கூறியுள்ளதுபோல் குடியிருந்து வருகிறார்கள் என்று நிரூபணம் செய்வதற்கு ஏதேனும் ஆவணங்கள் வைத்துள்ளார்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ள விபரம் தெரியுமா என்றால், தெரியாது. 4 ம் பிரதிவாதி அவர் வாங்கிய சொத்தை அனுபவித்து வருகின்றாரா என்ற விபரம் தெரியுமா என்றால், தற்போது அந்த இடம் தரிசாகத்தான் உள்ளது. 4 ம் பிரதிவாதிதான் அனுபவித்தில் இருந்து வருகிறார் என்றாலும், அதை மறைத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் குடியிருக்கும் இடம் கண்டர்குலமாணிக்கம் கிராமம் என்றால், சரிதான். வழக்கு சொத்து புதூர் கிராமத்தில் உள்ளது என்றால், சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும், வழக்கு சொத்து இருக்கும் இடத்திற்கும் சுமார் 10 கி.மீ. தூரம் இருக்கும் என்று சொன்னால், சரியல்ல. 4 கி.மீ. தூரம் இருக்கும். வாதிகள் குடும்பம் பற்றியும் வழக்கு விபரம் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வாதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

ஒப்பம் /செல்வம்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.